# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.388/ந/2025 நாள். 18 .09.2026**

S. அன்பழகன்,
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். - மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். - எதிர் மனுதாரர்கள்

2. கட்டிட உரிமையாளர்,
அகிலா காம்ப்ளக்ஸ்,
திருச்சி சாலை, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, எண். 155, அசோக் நகர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. அன்பழகன் என்பவரது 15.11.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.11.2025 அன்று பெறப்பட்டு 388/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, எண். 155, அசோக் நகர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. அன்பழகன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

“துறையூர், திருச்சி சாலையில் செட்டியார் மெஸ், நியூ பாப்புலர் ஆட்டோ ஸ்பேர்ஸ், காப்பி கடை, அன்னை மொபைல்ஸ் அமைந்துள்ள அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம், அரசு கழிவு நீா கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து, தரைத் தளத்தில் மேற்சொன்ன கடைகளுடன் சிறிய ரூம் ஒன்றும், கட்டிடத்தின் தெற்குபுறம் ரமேஷ் ஜெராக்ஸ் கடையுடன் மாடிப்படி 2 1/4 சதுரடியில் அரசு இடத்தை ஆக்கிரமித்து, வாசல்படி வைத்து முதல் தளத்தில் வழக்கறிஞர் அலுவலகம் 4-ம், இரண்டாம் தளத்தில் கராத்தே பயிற்சி மையம் செயல்படும் சூழ்நிலையில் பார்க்கிங், செட்பேக் வசதியின்றி விதிமீறி செயல்படும் அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு பொது நலன் கருதி நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 29.09.2025 இல் புகார் அனுப்பி அதனை அவர் 03.10.2025 இல் பெற்று கொண்டதாக எனக்கு ஒப்புதல் அட்டை வந்துள்ளது. ஆணையருக்கு அனுப்பியுள்ள புகாரின் நகல் நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குநருக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து ஒப்புகை அட்டை வந்துள்ளது.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் TNCDBR 2019க்கு விரோதமாக அதுவும் பார்க்கிங், செட்பேக் வசதி அறவே இன்றி கட்டிடத்தின் முன்புறம் 1 அங்குலம் கூட காலி இடம் விடாமல், ஒட்டுமொத்த விதிகளையும் மீறி கட்டப்பட்டுள்ளதோடு, அரசு கழிவுநீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து கட்டப்பட்டுள்ளது எனக்கு அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுறுத்தல்களை துறையூர் நகராட்சி ஆணையர்கள் 15 வருடங்களாக கடைப்பிடிக்காத காரணத்தால்தான் விதி மீறி அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் இயங்கி வருவதாகவும், உரிய கால இடைவெளியில் இந்த கட்டிடத்தை ஆணையர்கள் ஆய்வு செய்திருந்தால், விதி மீறல்களை தடுத்திருக்கலாம் என்றும் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பணியில் இருந்த அனைத்து ஆணையர்களும் இந்த கட்டிடத்தை ஆய்வு செய்யாமல் இருப்பதிலிருந்து அனைத்து ஆணையர்களும் அகிலா காம்ப்ளக்ஸ் நிர்வாகிகளிடம் லஞ்சம் பெற்றுள்ளார்கள் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாக நிரூபணமாவதாக கூறி இருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதி மீறல் தொடர்பான அனைத்து வழக்குகளிலும், விதி மீறிய கட்டிடத்தை இடிப்பது அதிகாரிகளின் கடமை என்று உத்தரவு பிறப்பித்துள்ளதை தெரிந்தும் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக துறையூர் நகர் முழுவதும் விதிமீறல் கட்டிடங்கள் புற்றீசல் போல் காணப்படுவதிலிருந்து அனைத்து ஆணையர்களும் தங்களை உயர்நீதிமன்றத்தை விட சர்வ வல்லமை படைத்தவர்களாக கருதி செயல்பட்டுள்ளார்கள் என்று கூறினால் அது மிகையல்ல என்று கருதுவதாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199–12200/2025 நாள் 30.04.2025 இல் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் விதிமீறி செயல்படும் கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் Roc எண். 3555/2025/TP3, நாள் 15.05.2025 கடிதம் மூலம் அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் கடிதம் அனுப்பியும், ஆணையர் விதிமீறிய கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் மாண்புமிகு உச்சநீதிமன்றத்திற்கே சவால் விடும் விதமாக செயல்படுவதாக கூறி இருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே சமீபத்தில் உயர்நீதிமன்றத்தில் சென்னை மாநகராட்சி ஆணையர் விதிமீறல் கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்காக மன்னிப்பு கோரிய வழக்கில் உயர்நீதிமன்றம் விதிமீறல் கட்டிடம் தொடர்பான நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றுவதில் அதிகாரிகள் எச்சரிக்கை மற்றும் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளதை கவனத்தில் கொண்டு உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் விதி மீறி கட்டியுள்ள அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கூறி இருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே ஆணையர் அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை நேரடியாக கள ஆய்வு செய்து TNCDBR 2019-ன்படி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்பதையும் கட்டிட வரைப் படத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவு சான்று நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து சிறுவர்கள் கராத்தே பயிற்சி மையத்திற்கு செல்லும் மாடிபடி 2 1/4 சதுரடி அகலத்தில் அமைத்துக் கொள்ள நகராட்சி அனுமதி அளித்துள்ளதா என்பதையும், மாடிபடி 2 1/4 சதுரடி அளவில் குறுகியதாக உள்ளதால் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் ஸ்ரீரங்கம் திருமண மண்டபத்தில் நடந்த தீ விபத்தில் ஏராளமான பேர் இறந்து போனதை கருத்தில் கொண்டு உடன் உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இடித்து அகற்றுமாறு கேட்டுக்கொண்டதோடு தலைமை செயலாளரின் சுற்றறிக்கைப்படி 30 நாட்களுக்குள் எனக்கு பதில் அளிக்கவில்லை என்றால் மாண்புமிகு உயர்நீதி மன்றம், மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரிடம் ஆணையருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் என்று தெரிவித்திருந்தேன்.

எனவே, நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உச்சநீதி மன்ற, உயர்நீதி மன்ற உத்தரவுகளை சுட்டிக் காட்டியதோடு தலைமைச் செயலாளரின் சுற்றறிக்கைபடி எனக்கு 30 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் மாண்புமிகு உயர்நீதி மன்றம் மாண்புமிகு உள்ளாட்சி

அமைப்புகள் முறை மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் என்று கூறியும், இதுவரை விதிமீறிய அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதிலிருந்து விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தையாக செயல்படுகிறார் என்பது நன்கு விளங்குகின்றது.

விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் தான் உடந்தையாக செயல்படுகின்றார் என்றால் நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குநர் இருவரும் ஆணையருக்கு தாங்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபிக்கும் வகையில் என் புகார் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதிலிருந்து நகராட்சி நிர்வாகம் எவ்வளவு சீர்க்கேடு அடைந்துள்ளது என்பது புரிகிறது.

எனவே, விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தை என்று நான் கருதுவதால் அவர் குற்றத்தை அவர் விசாரிப்பது பொருத்தமாக இருக்காது என்பதாலும், அவர் கொடுக்கும் அறிக்கை, வாக்குமூலம் அனைத்தும் உண்மைக்கு மாறாக இருக்கும் என்று நான் கருதுவதால் மாண்புமிகு உயர்நீதிமன்றம் போன்று சிறந்த நீதி வழங்கும் மதிப்பு மிக்க தாங்கள் அகிலா காம்ளக்ஸ் கட்டிடத்தை இட நேராய்வு செய்து அந்த கட்டிடம் TNCDBR 2019-ன் படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்வதோடு, 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது தெரிய வந்தால் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி, பார்க்கிங் வசதி இடம் விடப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்து கட்டிட வரைப்படத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவு சான்று நகராட்சி வழங்கி இருக்கிறதா என்பதை கண்டறிந்து விதிமீறி செயல்படும் அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199-12200 வழக்கின் உத்தரவில் விதி மீறி கட்டிடம் கட்டப்பட்டிருந்தால் அதை முறைப்படுத்த அனுமதிக்க கூடாது என்றும், அந்த கட்டிடத்தை இடிப்பது ஒன்றுதான் வழி வேறு வழி இல்லை என்றும் கூறி உள்ள அடிப்படையில் இடித்து அகற்றுமாறு பணிவுடன் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்''.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் துறையூர் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால், நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரரின் புகார் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களான நகராட்சி ஆணையர், துறையூர், மற்றும் அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிட உரிமையாளர் ஆகியோரை 12.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. நிர்வாக காரணங்களினால், இவ்விசாரணை ஒத்திவைக்கப்பட்டு 19.05.2026 அன்று நடைபெறும் என இம்முறை மன்ற 21.04.2026 நாளிட்ட கடிதம் வழியாக மனுதாரர், எதிர் மனுதாரர்களான துறையூர் நகராட்சி ஆணையர், மற்றும் அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிட உரிமையாளர் ஆகியோருக்கு தெரிவித்து அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. இந்நிலையில், துறையூர் நகராட்சி ஆணைர் தனது கடிதம் ந.க.எண். 4549/2025/எப்1, நாள் 04.05.2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''அகிலா காம்ப்ளக்ஸ் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. அதில் தரைத் தளத்தில் 1240 சதுரடி பரப்பளவு கொண்ட RCC கட்டிடத்தில் 5 கடைகள் உள்ளது. அதில் அன்னை மொபைல்ஸ், மைசூர் கபே, நியூ பாப்புலர் ஆட்டோ ஸ்பேர்ஸ், செட்டியார் மெஸ் மற்றும் தெற்குபுறம் ரமேஷ் ஜெராக்ஸ் கடைகள் இயங்கி வருவதாக தெரியவருகிறது. முதல் தளத்தில் 738 சதுரடி பரப்பளவில், 3 கடைகள் உள்ளது. அதில் வழக்கறிஞர் அலுவலகம், சசிகுமார் வழக்கறிஞர் அலுவலகம் மற்றும் ஒரு கடை மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளது. இரண்டாம் தளத்தில் 738 சதுரடி பரப்பளவு கொண்ட Tin Sheet Roof Area அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. அதில் கராத்தே பயிற்சி மையம் இயங்கி வருவதாக தெரியவருகிறது. கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 2716 சதுரடியாகும். தரைத் தளத்திற்கு 684 சதுரடி அனுமதி பெறப்பட்டு மாறுதலாக 1240

சதுரடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. முதல் தளத்திற்கு 633 சதுரடி அனுமதி பெறப்பட்டு மாறுதலாக 738 சதுரடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. முன்பக்கம், பின்பக்கம், திறவிட ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வாகனம் நிறுத்துவதற்று இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

வரிவிதிப்பு எண்கள் 087/020/900510, 087/020/900511, 087/020/900512, 087/020/900513, 087/020/900514, 087/020/900515, 087/020/900516 மற்றும் 087/020/900517 ஆகிய எட்டு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)-ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''.

5. 2-வது எதிர் மனுதாரரான அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிட உரிமையாளர், தனது நாளிடப்படாத கடிதம் இம்முறைமன்ற நடுவத்தில் 11.05.2026ல் பெறப்பட்டதில், திரு. S. அன்பழகன் என்பவரின் புகார் மனு சம்மந்தமாக விசாரணை 19.05.2026 அன்று நடைபெறுவதாக அழைப்பாணை பெறப்பட்டது என தெரிவித்து, எதிர்பாராத விதமாக தனது தாயார் கடந்த 05.05.2026 அன்று காலமாகிவிட்டபடியால், அதனைத் தொடர்ந்து சில காரியங்கள் செய்ய வேண்டி இருப்பதாலும், 20.05.2026 அன்று 16-ம் நாள் காரியம் நடைபெற உள்ளதாலும், தன்னால் மேற்படி 19.05.2026 அன்று விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்று தெரிவித்து விசாரணைக்கு மாற்று தேதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மனுதாரரான திரு. S. அன்பழகன் தனது 14.05.2026 நாளிட்ட இம்முறை மன்றத்திற்கு அனுப்பிய கடிதத்தில், தான் கடந்த 10.05.2026இல் தனது பழைய முகவரியில் இருந்து புதிய முகவரிக்கு வாடகைக்கு வீடு மாறுதலாகி சென்றபோது, வீட்டு சாமான்கள் வாகனத்தில் ஏற்றும்போது வாகனத்தில இருந்து தவறி கீழே விழுந்து தனது வலது கால் பாதத்தின் மேல் பகுதியும், வலது கனுக்கால் எலும்பு லேசாக முறிவு ஏற்பட்டுவிட்டது என்றும் கால் எலும்பு முறிவு ஏற்பட்டதன் விளைவாக துறையூரில் பிரபலமான இயற்கை வைத்தியம் ஈச்சம்பட்டு எண்ணை கட்டு போடப்பட்டு குறைந்தது மூன்று நான்கு மாதங்கள் கால் நடக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது எனவும் வைத்தியரும் பாத்ரூம் செல்வதை தவிர்த்து படுக்கையில்தான் இருக்கவேண்டும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார் என தெரிவித்து, இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் முறையீட்டு மனுக்கள் 367/ந/2025, 370, 393, 372, 388 ம் 19.05.2026 இல் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள முடியாத நிலையை கூறி மேற்கண்ட முறையீட்டு மனுக்களுக்கு தனித்தனியே அறிக்கையை முறைமன்ற நடுவத்திற்கு இணைத்து அனுப்பியுள்ளார். மேலும், வருங்காலங்களில் முறையீட்டு மனுக்கள், உத்தரவுகள், அழைப்பாணைகள் நகராட்சி, மாநகராட்சி சம்மந்தமான அனைத்தையும் தற்கால முகவரிக்கு மாற்றி அனுப்பிவைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்து தனது தற்காலிக முகவரியை தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரரின் தற்காலிக முகவரி என S. அன்பழகன், 758/7A, குணாளன் நகர், அரவிந்த் பள்ளி முன்புறம், துறையூர் அஞ்சல் மற்றும் வட்டம், திருச்சி மாவட்டம் 621 010'' என தெரிவித்துள்ளார்.

7. அதன்படி மனுதாரர் அனுப்பியுள்ள 14.05.2026 நாளிட்ட அறிக்கையில், திருச்சி மாவட்டம், துறையூரில், துறையூர் திருச்சி சாலையில் செட்டியார் மெஸ், நியூ பாப்புலர் ஆட்டோ ஸ்பேர்ஸ், காப்பி கடை, அன்னை மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடம் அரசு கழிவு நீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து அகிலா காம்ப்ளக்ஸ் என்ற பெயருடன் தரைத்தளத்தில் மேற்சொன்ன கடைகளுடன் சிறிய ரூம் ஒன்றும், கட்டிடத்தின் தெற்குபுறம் ரமேஷ் ஜெராக்ஸ் கடையுடன், முதல் தளத்தில் வழக்கறிஞர் அலுவலகம் 4 உடன் இரண்டாம் தளத்தில் கராத்தே பயிற்சி மையம் செயல்படுகின்றது. இந்த கட்டிடத்தின் மாடிபடி 2 1/4 சதுர அடியில் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து விதி மீறி கட்டப்பட்டுள்ளது. விதி மீறிய அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு புகார் கொடுத்தும், லஞ்சம் பெற்றுக்கொண்டு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த பெரும்பாலான வழக்குகளில் நான் புகார் கொடுத்ததற்கு பின்புதான் பார்க்கிங் இடம் வாங்கியதாக அனைத்து கட்டிட நிர்வாகிகளும் இந்த முறை மன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதாலும், கட்டிட நிர்வாகிகளுக்கு ஆதரவாக பார்க்கிங் இடம் புதிதாக வாங்கி உள்ளதாக அனைத்து ஆணையர்களும் பொய்யாக கூறி வருவதால், இந்த வழக்கிலும் பார்க்கிங் இடம் கட்டிட வரைப்படத்தில் காண்பிக்காமல் புதிதாக வாங்கி உள்ளதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை நகராட்சியால் பதிவு செய்து பார்க்கிங் இடத்திற்கான ரசீது நகராட்சி மூலம் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதையும் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லி அதனை தாங்கள் வழக்கின் உத்தரவில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேலும், உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைத்தளம் + முதல் தளம்) 2000 சதுரடி என்று விதிமுறை இருப்பதால் அகிலா காம்ப்ளக்ஸ் உள்ள கட்டிடம் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு விதிப்படிதான் கட்டப்பட்டுள்ளதா என்பதை வழக்கின் உத்தரவில் தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த பெரும்பாலான வழக்குகளில் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று துறையூர் நகராட்சி ஆணையர்கள் தொடர்ந்து கூறிவருவதால், சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நடந்த CMP No. 4315/2026 வழக்கில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கோப்பு தொலைந்துவிட்டது என்று கூறியதற்கு இது போதுமான காரணம் இல்லை என்றும் அரசு அலுவலகங்கள் கோப்பு சுற்றுமுறை என்று கூறி தப்பிக்க முடியாது என்றும், இது எதிர்தரப்புடன் சேர்ந்து கூட்டுச் சதியாக இருக்கலாம் என்றும் உச்சநீதி மன்றம் ஏற்கெனவே பல தீர்ப்புகளில் தெளிவாக கூறியதாக கூறி இந்த வழக்கை விஜிலன்ஸ் துறை விசாரித்து உண்மையை கண்டறிய வேண்டும் என்று கடந்த 20.02.2026-இல் உயர்நீதிமன்ற உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித் துறை இயக்குநருக்கு ரூ.50 இலட்சம் அபராதம் உயர்நீதிமன்றம் விதித்துள்ளது. எனவே, இந்த வழக்கில் ஆவணம் இல்லை என்று ஆணையர் கூறினால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் கீழ் நகராட்சி ஆணையர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199-12200 நாள் 30.04.2025 வழக்கின் உத்தரவில் அனுமதியற்ற கட்டிடத்தை முறைப்படுத்த கூடாது என்றும், அனுமதியற்ற கட்டிடத்தை இடிப்பது ஒன்றுதான் வழி என்றும், இதற்கு வேறு வழி இல்லை என்று திட்டவட்டமாக கூறி உள்ள நிலையில் மாண்புமிகு தங்கள் முன்பு நடைபெற்ற பெரும்பாலான வழக்குகளில் விதி மீறிய கட்டிட நிர்வாகிகள் அனுமதி பெறாத கட்டிடத்தை முறைப்படுத்த 80-A இன் கீழ் மேல்முறையீடு செய்து மனு அளித்துள்ளதை தாங்கள் சட்டப்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவிற்கு எதிராக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை தாங்கள் உத்தரவில் தெளிவாக விளக்கவும்.

மேலும், ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த முறையீட்டு மனுக்கள் 102/ந/2025, 104/ந/2025 ஆகிய இரண்டு வழக்கு விசாரணையின்போது தங்கள் முன்பாக 10.06.2025 இல் நேரடியாக ஆஜராகி சத்திய பிரமானம் செய்து அளித்த வாக்குமூலத்தில் துறையூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர் அம்பிகா அவர்கள் மேற்கண்ட 102/ந/2025 ராஜா சில்க்ஸ், 104/ந/2025 ஸ்ரீ குமரன் டெக்ஸ் இரண்டின் ஆவணம் நகராட்சியில் இல்லை என்று தெரிவித்துவிட்டு ந.க.எண். 2654/2025/சி2, நாள் 01.08.2025 கடிதம் மூலம் எனக்கு ராஜா சில்க்ஸ், ஸ்ரீ குமரன் டெக்ஸ் இரண்டின் கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் கட்டிட வரைவுப் பட நகலும் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

எனவே, மரியாதைக்குரிய, மதிப்புமிக்க நீதிபதி தகுதியுடன் நேர்மையாக பணிபுரியும் தங்கள் முன்பாக சத்திய பிரமாணம் செய்து ஆவணம் இல்லை என்று தைரியமயாக, துணிச்சலாக, மாண்புமிகு தங்களை ஏமாற்றுகின்றோம் என்று தெரிந்தே கூறிவிட்டு அதற்கு நேர்மாறாக ஆவணம்

பெற்றுக்கொள்ளுமாறு எனக்கு கடிதம் அனுப்பிய துறையூர் நகராட்சியின் செயலை பார்க்கும்போது விதிமீறிய அனைத்து கட்டிட நிர்வாகிகளிடம் தாராளமாக, ஏராளமாக லஞ்சம் பெற்றுக்கொண்டு விதிமீறிய கட்டிட நிர்வாகிகளுடன் கைகோர்ந்து கொண்டு சட்டத்தை மீறுவதை வழக்கமாகவும், வாடிக்கையாகவும், கொண்டு செயல்படுகின்றார்கள் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிறது.

எனவே, நேர்மையின் சிகரமான தாங்கள் துறையூர் நகராட்சியின் சட்ட விரோத நடவடிக்கைக்கு முற்று புள்ளிவைக்கும் வண்ணம் துறையூரில் உள்ள அகிலா காம்ளக்ஸ் கட்டிடத்தை நேரில் இட நேராய்வு செய்து அந்த கட்டிடம் கட்டிட வரைப்படத்தில் உள்ளவாறு முறையாக கட்டப்பட்டு, நகராட்சியிடம் பணி நிறைவுச் சான்று பெற்றுள்ளதா என்பதை ஆய்வு செய்து அந்த கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால், மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199-12200 நாள் 30.04.2025இன் படி இடித்து அகற்றுமாறும், நான் புகாரில் கூறியது பொய் என்றால் என் மீது எடுக்கும் நடவடிக்கையை மனபூர்வாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவுடன், தாழ்மையுடன் தெரிவித்து கொள்கின்றேன்.

8. எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 4549/எப்1/2025, நாள் 18.05.2026-ல் துறையூர் நகராட்சி ஆணையராகவும், பெரம்பலூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) ஆகவும் பணிபுரிந்து வருவதாலும், மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க. COLREV/41366/2023-L2, நாள் 13.05.2026-ல் 19.05.2026 முதல் 21.05.2026 வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு–2027க்கான 3 நாள் பயிற்சியில் கலந்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதால், 19.05.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திருமதி த. தவமணி என்பவரை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, 19.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் திருமதி த. தவமணி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“ மனுதாரரின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக கட்டப்பட்டு, தரைத்தளம் 1240 சதுர அடி கொண்ட RCC கட்டிடத்தில் 5 கடைகள் உள்ளது. அதில் அன்னை மொபைல்ஸ், மைசூர் கபே, நியூ பாப்புலர் ஆட்டோ ஸ்போர்ஸ், செட்டியார் மெஸ் மற்றும் தெற்குபுறம் ரமேஷ் ஜெராக்ஸ் கடைகள் இயங்கி வருகிறது. முதல் தளத்தில் 738 சதுர அடி பரப்பளவில், 3 கடைகள் உள்ளது. அதில் வழக்கறிஞர் அலுவலகம், சசிக்குமார் வழக்கறிஞர் அலுவலகம் மற்றும் ஒரு கடை மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளது. இரண்டாம் தளத்தில் 738 சதுர அடி பரப்பளவு கொண்ட Tin sheet roof area அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. அதில் கராத்தே பயிற்சி மையம் இயங்கி வருகிறது. கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 2716 சதுர அடியாகும். தரைத்தளத்திற்கு 684 சதுர அடி அனுமதிபெறப்பட்டு மாறுதலாக 1240 சதுர அடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. முதல் தளத்திற்கு 633 சதுர அடி அனுமதி பெறப்பட்டு மாறுதலாக 738 சதுர அடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. முன்பக்கம், பின்பக்கம் திறவிடம் ஒதுக்கீடு செய்யவில்லை. வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யவில்லை.

வரிவிதிப்பு எண்கள். 087/020/900510, 087/020/900511, 087/020/900512, 087/020/900513, 087/020/900514, 087/020/900515, 087/020/900516 மற்றும் 087/020/900517 ஆகிய எட்டு வரி விதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை.

மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

9. மேலே பத்தி 5–ல் தெரிவிக்கப்பட்ட 2 வது எதிர் மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று, மனுதாரரின் புகார் குறித்த விசாரணை 12.06.2026 அன்று நடைபெறும் என்ற விவரம் இம்முறை மன்ற நடுவத்தின் 26.05.2026 நாளிட்ட அழைப்பாணை மூலம் 2–ம் எதிர் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. அதன் நகல் மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டது.

10. 12.06.2026 அன்றைய விசாரணைக்கு, 2வது எதிர் மனுதாரர் 10.06.2026 நாளிட்ட கடிதத்தில், தனது உடல் நிலை சரியில்லாத காரணமாக நேரில் வர இயலவில்லை என்றும், அதற்கு பதிலாக தனது அண்ணன் மகன் M. சுதாகர் என்பவரை தனது சார்பாக அனுப்பியுள்ளேன் என்று தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து 12.06.2026 அன்று நடைப்பெற்ற விசாரணையில் திரு. M. சுதாகர் என்பவர் ஆஜராகி தனது வாக்குமூலத்தை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு சமர்ப்பித்துள்ளார். அதில்:–

"துறையூர் திருச்சி சாலையில் அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் தரைத்தளத்தில் கடைகளுடன் முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவற்றை அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளுக்குட்பட்டு கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், நாங்கள் எங்களது கட்டிடம் வரன்முறை செய்து கொள்வதற்காக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971 (Tamil Nadu Town and Country Planning Act, 1971) பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளோம் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். மேல்முறையீடு செய்ததற்கான ஒப்புகை சீட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கிறேன் என்பதையும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்".எனத் தெரிவித்துள்ளார்.

11. மனுதாரரரின் புகார் மனு மற்றும் அவர் அளித்துள்ள அறிக்கை, முதலாம் எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் துறையூர் நகராட்சி ஆணையர் சார்பில் விசாரணைக்கு ஆஜரான நகராட்சி ஆய்வாளரின் வாக்குமூலம், 2வது எதிர் மனுதாரரான அகிலா காம்ப்ளக்ஸ் உரிமையாளரின் சார்பில் ஆஜரான திரு. M. சுதாகர் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர்–திருச்சி சாலையில் செட்டியார் மெஸ், நியூ பாப்புலர் ஆட்டோ ஸ்பேர்ஸ் , காப்பி கடை ஆகியன அமைந்துள்ள அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் அரசு கழிவு நீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து, தரைதளத்தில் மேற்சொன்ன கடைகளுடன் சிறிய ரூம் ஒன்றும், கட்டிடத்தின் தெற்குபுறம் ரமேஷ் ஜெராக்ஸ் கடையுடன் மாடிபடி 2 1/4 சதுர அடியில் அரசு இடத்தை ஆக்கிரமித்து வாசல்படி வைத்து, முதல் தளத்தில் வழக்கறிஞர் அலுவலகம் நான்கும், இரண்டாம் தளத்தில் கராத்தே பயிற்சி மையம் ஆகியன செயல்படும். மேற்படி கட்டிடம் செட்பேக் வசதியின்றி விதி மீறி செயல்படுகிறது எனவும், அக்கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி மனுதாரர் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 29.09.2025ல் புகார் செய்தும், இதுநாள் வரை எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் TNCDBR 2019க்கு விரோதமாக பார்க்கிங், செட்பேக் வசதியின்றி கட்டிடத்தின் முன்புறம் ஒரு அங்குலம் கூட காலி இடம் விடாமல் ஒட்டுமொத்த விதிகளையும் மீறி கட்டப்பட்டுள்ளது எனவும், அரசு கழிவுநீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து கட்டப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து, மேற்படி அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி பார்க்கிங் வசதி இடம் விடப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தும், கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவு சான்று நகராட்சி வழங்கி இருக்கிறதா என்பதை கண்டறிந்து விதிமீறி செயல்படும் அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199–12200 வழக்கின் உத்தரவில் விதிமீறி கட்டிடம் கட்டப்பட்டிருந்தால் அதை முறைபடுத்த அனுமதிக்கக்கூடாது என்றும், அந்த கட்டிடத்தை இடிப்பது ஒன்றுதான் வழி வேறு வழி இல்லை எனவும் தெரிவித்து விதிமீறி

கட்டப்பட்டுள்ள அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனுவிலிருந்து தெரிய வருகிறது.

அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதாகவும், அதில் தரைத்தளத்தில் 1240 சதுர பரப்பளவு கொண்ட RCC கட்டிடத்தில் அன்னை மொபைல்ஸ், மைசூர் கபே, நியூ பாப்புலர் ஆட்டோ ஸ்பேர்ஸ், செட்டியார் மெஸ் மற்றும் தெற்குபுறம் ரமேஷ் ஜெராக்ஸ் கடை ஆகிய 5 கடைகள் இயங்கி வருவதும், முதல் தளத்தில் 738 சதுர அடி பரப்பளவில் 3 கடைகள் உள்ளதும், அதில் வழக்கறிஞர் அலுவலகம், சசிகுமார் வழக்கறிஞர் அலுவலகம் மற்றும் ஒரு கடை மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளதும், இரண்டாம் தளத்தில் 738 சதுர அடி பரப்பளவு கொண்ட Tin sheet Roof area அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்பதும், அதில் கராத்தே பயிற்சி மையம் இயங்கி வருகிறது என்பதும், கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 2716 சதுர அடி என்பதும், தரைத்தளத்திற்கு 684 சதுர அடி அனுமதி பெறப்பட்டு மாறுதலாக 1240 சதுர அடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், முதல் தளத்திற்கு 633 சதுர அடி அனுமதி பெறப்பட்டு மாறுதலாக 738 சதுர அடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், முன்பக்கம், பின்பக்கம் திறவிடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும், வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும், மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

துறையூர் திருச்சி சாலையில் அமைந்துள்ள அகிலா காம்ப்ளக்ஸ் கட்டிடம் தரைத்தளத்தில் கடைகளுடன், முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவற்றை அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளுக்குட்பட்டு கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டிடத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், தங்களது கட்டிடம் வரன்முறை செய்துகொள்வதற்காக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971 (Tamilnadu Town and Couutry Planning Act, 1971,பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் 2ம் எதிர்மனுதாரராகிய அகிலா காம்ப்ளக்ஸ் உரிமையாளரின் சார்பில் விசாரணைக்கு ஆஜரான திரு. M.சுதாகர் என்பவரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

12. இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

“9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of the State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals.xxx xxx xxx.”.

எனவே, புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்துகொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாக இரண்டாம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளரின் சார்பில் ஆஜரான திரு. M.சுதாகர் என்பவரால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் உண்மைத்தன்மையினை கண்டறிந்து இது குறித்து

அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 18 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

பெறுநர்

1) திரு. S. அன்பழகன்,
758/7A, குணாளன் நகர்,
அரவிந்த் பள்ளி முன்புறம்,
துறையூர் (அஞ்சல் & வட்டம்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 621010.

2 ) நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) கட்டிட உரிமையாளர்,
அகிலா காம்ப்ளக்ஸ்,
திருச்சி சாலை, துறையூர் – 621 010,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்/
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்– மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

செயலாளர்.